முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1688

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.05.2024, திங்கட்கிழமை

1. தர்ம ஞானியே அரங்கா வாழ்க
தவலமிக்க தேசிகா வாழ்க
பெருமைமிக்க ஞானிகளை உருவாக்க
பூதலத்தில் பிரணவக்குடில் படைத்த அரசனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
வரமாக அரங்கன் நீ என் சக்தியாகவே
வையகத்தை வழி நடத்தி வருதல் காண
3. அறமென உன் வழி தொடர்ந்து வருபவர்க்கெல்லாம்
ஆறுமுகன் யான் ஆசி காட்சி தந்தருள்வேன்
அருளவே உன்வழி அடையாளம் கொண்டு
அகிலத்தில் சீடர்களென தர்மத்தை கைக்கொண்டவர்க்கு எல்லாம்
4. மகிழவே அவர்கள் வாழ்வில் மாற்றமும்
மாதவசி என்கின்ற ஆக்கமும் தந்து
ஆறுமுகன் யான் தர்மவானாக ஞானவானாக
அரங்கன் சீடர்பெருமக்கள் அனைவருக்கும்
5. யுகமாற்றம் புரியும் வல்லமையும்
உயிர்கொலை நீக்கி உன்வழி சைவ நெறி பற்றும்
பற்றும் புண்ணியவான்கள் அனைவருக்குமே
பழுதின்றி கலியுகத்தில் ஞானிகள் என்கின்ற அடையாளத்தை
6. அடையாளத்தை உருவாக்கி இனிதே ஆறுமுகன் யான்
ஆற்றல்பட அரங்கன் குலம் அகத்தியர் குலம்
மாற்றம் தருகின்ற ஆறுமுகன் என் குலமென
மக்களுக்கு உயர்வான அடையாளங்கள் தந்து

7. தந்துமே கலியுகத்தையே ஞான யுகமாக
கந்தவேலன் யான் உன் அடையாளத்தை மாற்றுவேன்
சிந்தை கொண்டு உன் வழி உலகமெல்லாம் சிறப்பான கிளைகள் பரவப்பரவ
விந்தைபட ஞான யுகமாற்றம் விரைந்து வடிவேலன் என்னால் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–